**12.05.2026** **STC 07/2019** **PW1. ஐயப்பன்**

கடந்த 07.10.2025–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.07/2026 dated 17.02.2026–ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 12.05.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், கொத்தனார் வேலை செய்து வருகிறேன். TN75Y7011 என்ற வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால், எனக்கு சொந்தமானது. மேற்படி வாகனத்தை நான் எப்பொழுது வாங்கி விற்பனை செய்தேன் என்றால், 2017 புதிதாக வாங்கினேன். 2019ம் ஆண்டு ஆரம்பத்தில் விற்பனை செய்தேன்.

2. நான் எந்த வருடத்தில் மேற்படி வாகனத்தை நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வாடகைக்கு கொடுத்தேன் என்றால், சரிதான். 2017 ஆகஸ்ட் மாதம் வாடகைக்கு கொடுத்தேன். அதற்கு மாத வாடகை தொகை எவ்வளவு என்றால், 36 ஆயிரம் ஆகும்.

3. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வாடகைக்கு வண்டியை கொடுக்கும் பொழுது என்ன ஆவணங்கள் பிணையாக வாங்கினேன் என்றால், அவ்வாறு ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தூத்துக்குடி ஊரைச் சேர்ந்தவர் என்றால், சரிதான்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்கள் குறித்து எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் வாகனத்தை கொடுத்தேன் என்றால், எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் பழக்கம் என்பதால் நான் குளச்சல் ஹார்பரில் வைத்து கொடுத்தேன்.

5. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வாகனத்தை வாடகைக்கு கொடுத்த பொழுது அது குறித்து ஒப்பந்தம் எதுவும் எழுதினேனா என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால், இல்லை.

6. 17.01.2018 தேதியன்று நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சேர்ந்து வாடகை ஒப்பந்தம் எழுதி அன்றைய தேதியன்றே வாகனத்தை நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்து முதல் மாத வாடகை பணமான 36 ஆயிரம் ரூபாய் பெற்றேன் என்றாலும், சரியல்ல. மேலும் அன்றைய தினமே குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் நிரப்பப்படாத கையெழுத்திட்ட 7 காசோலைகள் பெற்றுக் கொண்டு வாகனத்தை வாடகைக்கு கொடுத்தேன் என்றால், இல்லை.

7. மேற்படி ஏழு காசோலைகளில் நான் ஒன்றை பயன்படுத்தி ஒருமாத வாடகை தொகையான 36 ஆயிரம் பணத்தை காசோலையை வங்கியில் தாக்கல் செய்து பெற்றேன் என்றால், இல்லை. அதன் பிறகு உள்ள இரண்டு மாத வாடகை தொகைகளை நான் கையில் ரொக்கமாக பெற்றுக் கொண்டேன் என்றால், நான் மொத்தம் இதுவரை 6 மாத கால வாடகையை ரொக்கமாக பெற்றுள்ளேன். அதில் 10 ஆயிரம் ரூபாய் பாக்கி அவர் தர வேண்டியுள்ளது.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து வாகனத்தை எப்பொழுது திரும்ப வாங்கினேன் என்றால், 2018ம் வருடம் செப்டம்பர் மாதம் திரும்ப வாங்கினேன். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து எனது வாகனத்தை திரும்ப வாங்கிக் கொடுக்க வேண்டி தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்து நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான்.

9. மேற்படி காவல்நிலையத்தில் வைத்து எங்கள் இருவரிமும் பேச்சுவார்த்தை நடத்தி அதன்பிறகு நான் வாகனத்தை பெற்றுக் கொண்டேன் என்றால், சரிதான். அன்றைய தினம் நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் காவல்நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்தோம் என்றால், எனக்கு அது சரியாக ஞாபகம் இல்லை.

10. நான் மேற்படி காவல்நிலையத்திலிருந்து வாகனத்தை பெற்றுக் கொண்டேன் என்றால், சரிதான். அப்பொழுது வாகனத்தை பெற்றுக் கொண்டதற்கு ஏதேனும் காவல்நிலையத்தில் எழுதிக் கொடுத்தேனா என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை.

11. 21.07.2018 தேதியன்று காவல்நிலையத்தில் நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சேர்ந்து வாக்குமூலம் எழுதிக் கொடுத்தோம் என்றாலும், மேலும் வாகனத்தை

பெற்றுக் கொண்டதாக வாடகை ஒப்பந்த பத்திரத்தின் பின்புறமும் எழுதிக் கையொப்பம் செய்துக் கொடுத்தேன் என்றால், நான் காவல்நிலையத்தில் எழுதிக் கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் பத்திரத்தில் எழுதிக் கொடுக்கவில்லை.

12. இவ்வழக்கு காசோலையை என்றைய தினம் எங்கு வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் கொடுத்தார் என்ற விவரம் வழக்காவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கு வைத்து எப்பொழுது காசோலையை கொடுத்தார் என்றால், குளச்சல் ஹார்பரில் வைத்து 2018 செப்டம்பர் மாதம் காசோலையை கொடுத்தார். தேதி சரியாக ஞாபகம் இல்லை.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கு வைத்து எப்பொழுது காசோலை கொடுத்தார் என்ற விவரத்தை வழக்காவணங்களில் குறிப்பிடாத காரணத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்க வழக்கு அல்ல என்றால், சரியல்ல. வழக்கு காசோலையை நான் எத்தனை முறை வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால், 3 முறை தாக்கல் செய்தேன்.

14. காசோலையை இருமுறை வங்கியிலிருந்து திருப்பப்பட்டதை குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எழுத்து பூர்வமாக தெரிவித்தேனா என்றால், நான் எழுத்துப் பூர்வமாக கொடுக்கவில்லை. ஆனால் போன் மூலம் தான் தகவல் கொடுத்தேன். நான் போன் மூலமாக தகவல் கொடுத்தேன் என்று கூறுவது இவ்வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால், சரியல்ல.

15. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீன் வியாபாரம் செய்து வரும் நபர் என்றால், சரிதான். அவர் மீன் வியாபாரம் செய்வதால் அவரது வங்கிக் கணக்கிற்கு நிறைய பணம் வந்து செல்லும் என்றாலும், எனவே அதனை நான் எப்படியாவது எடுத்து விடலாம் என்ற கெட்ட எண்ணத்தில், பலமுறை காசோலையை வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல.

16. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் இவ்வழக்கு சம்மந்தமாக உள்ள பிரச்சனை காலக்கட்டங்களில் உள்ள என்னுடைய வங்கிக் கணக்கின் Account Statement–யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையேயுள்ள கொடுக்கல் வாங்கல் வெளியே வரும் என்றால், சரிதான். மேற்படி Account Statement–யை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யலாமா என்றால், தாக்கல் செய்யலாம்.

17. எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இடையே ஏற்பட்ட வாகனம் சம்மந்தமான பிரச்சனை மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் வைத்து 21.07.2018 அன்று பேசி முடிக்கப்பட்டு வாகனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றாலும், அதன்பிறகு எங்களுக்கிடையே எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், சரியல்ல.

18. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் வாகனத்தை வாடகைக்கு கொடுக்கும் பொழுது பிணையாக பெற்ற காசோலையை வைத்து அவரை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்து பொயசாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.